**குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.1, கடலூர்.**

**முன்னிலை : செல்வி.ஆர்.ஸ்ரீநிதி.B.A., L.L.B.(Hons), L.L.M.,**
**நீதித்துறை நடுவர் எண்.1**
**கடலூர்.**

2026- ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 06-ஆம் நாள் திங்கள்கிழமை
குற்றப்பல்வகை மனு எண். 677/2026
ஆண்டுப்பட்டிகை வழக்கு எண்.55/2023

தேவேந்திரன்
த/பெ. ராமகிருஷ்ணன்

...மனுதாரர் /எதிரி

--எதிர்--

அரசுக்காக,
தூக்கணாம்பாக்கம் காவல் நிலையம்
குற்ற எண்.338/2022 ...குற்றமுறையிடுபவர் / எதிர்மனுதாரர்

இம்மனு 12.03.2026 அன்று நீதிமன்ற கோப்புக்கு எடுக்கப்பட்டு மனுதாரர்/எதிரி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.S.ராம்மோகன் B.Sc., B.L., அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர்/குற்றமுறையிடுபவர் தரப்பில் அரசு குற்றவியல் வழக்கறிஞர் நிலை-2, திருமதி.நிவேதா அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதங்களை கேட்டும் ஆவணங்களை பரிசீலனை செய்தும், இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்.

**உத்தரவு**

மனுதாரர்/எதிரி தரப்பில் குற்றவியல் நடைமுறைப் சட்டப்பிரிவு 311-ன் கீழ் அ.சா.1 முதல் அ.சா.4ஐ மீண்டும் அழைத்து குறுக்கு விசாரணை செய்ய வேண்டி, இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2. மனுவின் சுருக்கம்**:-

எதிர்மனுதாரர்/குற்றமுறையிடுபவர் தரப்பில், அ.சா.1 முதல் அ.சா.4ஐ முதல் விசாரணை செய்த அன்றைய தினம் குறுக்கு விசாரணை செய்யாததால், மேற்படி சாட்சியை மீண்டும் அழைத்து குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கவேண்டி எதிரி தரப்பில் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**3. எதிர் உரையின் சுருக்கம்:-**

எதிர்மனுதாரர்/குற்றமுறையிடுபவர் தரப்பில் வழக்கு நடவடிக்கையை காலதாமதப்படுத்த வேண்டுமென்றும், அரசு தரப்பு சாட்சிகளை வீண் சிரமத்திற்கு உள்ளாக்க வேண்டுமென்றும், இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகவும், மேலும் அ.சா.1 முதல் அ.சா.4ஐ குறுக்கு விசாரணை செய்ய இந்நீதிமன்றம் போதிய வாய்ப்பளித்தும் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை என்றும் வேண்டுமென்றே இம்மனு தாக்கல் செய்யப்பட்டிருப்பதாகவும், இம்மனுவினை தாக்கல் செய்வதற்கு உரிய காரணங்கள் எதுவும் எதிரி தரப்பில் கொடுக்கப்படவில்லை என்றும், "மாண்பமை உச்சநீதிமன்றம் Vinoth kumar -vs - State of Punjab என்ற வழக்கில் சாட்சிகள் முதல்விசாரணை செய்யப்படும் நாளன்றே குறுக்கு விசாரணை செய்யப்படவேண்டும் என்றும் தகுந்த காரணமின்றி குறுக்கு விசாரணை தள்ளி வைக்கப்படக் கூடாது என அறிவுறுத்தியுள்ளது" எனவே வழக்கினை வீண் காலதாமதம் செய்ய தாக்கல் செய்திருக்கும் இம்மனுவினை தள்ளுபடி செய்யவேண்டுமென்று கூறி எதிர்மனுதாரர் தரப்பில் ஆட்சேபனை தெரிவிக்கப்பட்டுள்ளது.

**4.** இருதரப்பும் கேட்கப்பட்டு, ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டது.

**5. தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சினை:-**

அ.சா.1 முதல் அ.சா.4ஐ மீண்டும் அழைத்து குறுக்கு விசாரணை செய்யக்கோரி தாக்கல் செய்துள்ள இம்மனு அனுமதிக்கப்படத்தக்கதா? இல்லையா? என்பதேயாகும்.

**6.** இவ்வழக்கில் கடந்த 05.05.2025 அன்று அ.சா.1 முதல் அ.சா.4 வரையானவர்களை முதல் விசாரணை செய்யப்பட்டுள்ளார். மேற்கண்ட சாட்சிகளை மீண்டும் அழைத்து குறுக்கு விசாரணை செய்வதற்காக இம்மனு போடப்பட்டுள்ளது.

**7.** அ.சா.1 முதல் அ.சா.4ஐ முதல் விசாரணை செய்த அன்றைய தினமே குறுக்கு விசாரணை செய்ய முடியவில்லை என்றும், எதிரி/மனுதாரருக்கு பொருள்சார்ந்த அம்சங்கள் சமீபத்தில் தெரியவந்துள்ளதாக மனுதாரர் தரப்பு மனுவில் குறிப்பிட்டுள்ளதை கருத்தில் கொண்டு, அ.சா.1 முதல் அசா.4ஐ குறுக்கு விசாரணை செய்யாமல் இவ்வழக்கினை முடிவு செய்வது நீதியின் நலனுக்கு உகந்ததாக அமையாது என்றும், அ.சா.1 முதல் அசா.4ஐ மீண்டும் அழைத்து குறுக்கு விசாரணை செய்வது, சாட்சிக்கு சிரமத்தை ஏற்படுத்தும் என்றாலும், இவ்வழக்கினை சரியாக முடிவு செய்வதற்கு (Just decision of the case) அவர்களை விசாரணை செய்து,

அதனடிப்படையில் இவ்வழக்கினை முடிவு செய்வது நீதியின் பால் நியாயமான ஒன்றாக அமையும் என்றும் இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

**8.** எதிர்மனுதாரர் - அரசு தரப்பு சாட்சியான அ.சா.1 முதல் அசா.4ஐ மீண்டும் அழைத்து குறுக்கு விசாரணை செய்ய வேண்டியது அவசியமான ஒன்றாக கருதி, மனுதார் தாக்கல் செய்துள்ள இம்மனு கீழ்க்கண்ட நிபந்தனைகளுடன் அனுமதித்து உத்தரவிடப்படுகிறது.

**1.** அ.சா.1 முதல் அ.சா.4 சாட்சிகளின் செலவுத் தொகையாக தலா ரூ.200/- மேற்படி சாட்சிகள் குறுக்கு விசாரணைக்காக நீதிமன்றத்தில் ஆஜராகும் தேதியன்று அவர்களிடம் நேரடியாக செலுத்த வேணடும்.

**2.** அ.சா.1 முதல் அசா.4 வரையான சாட்சிகள் குறுக்கு விசாரணைக்காக நீதிமன்றத்தில் ஆஜராகும் நாளன்றே குறுக்கு விசாரணை செய்யப்பட வேண்டும்.

**3.** முடிவாக இம்மனு நிபந்தனையுடன் அனுமதித்து உத்தரவிடப்படுகிறது.

இந்த உத்தரவு முழுவதும் என்னால் சுருக்கெழுத்தரிடம் சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழை திருத்தம் செய்யப்பட்டு, இன்று 06.04.2026-ல் திறந்த இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

SRINITHI R

Digitally signed by SRINITHI R
Date: 2026.04.06 16:45:14 +0530

நீதித்துறை நடுவர் எண்.1

கடலூர்.